மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வராஜ், அவர் பெருந்தன்மையோடு அதுபற்றிச் சிந்திப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, விட்டுவிடுங்கள்.

அடுத்து வினா எண் 15, திரு. ப. இராஜரெத்தினம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

15—

கால்நடை தீவனத் தொழிற்சாலை

***2779–திரு. ப. இராஜரெத்தினம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் பகுதியில் கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. ப. இராஜரெத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராயிரம் ஆண்டுகாலம் ஓய்ந்து கிடந்ததற்குப் பின்னால் வாராது வந்த மாமணியாய்த் தமிழ்த் திருநாட்டை ஆண்டு கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிகின்றேன். பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம் என்பது கால்நடை வளர்ப்பை முக்கியத் தொழிலாகக் கொண்ட மாவட்டம் என்பதை அனைவரும் அறிவார்கள். இந்த மாவட்டத்திலுள்ள மக்கள் கால்நடை வளர்ப்பின் மூலம் பெறுகின்ற வருமானத்தைத்தான் முக்கிய வருமானமாகக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு திருச்சி, பெரம்பலூர், கரூர் என்ற மூன்று மாவட்டங்களுக்கு ஒன்றாக இணைந்து செயல்பட்டு வருகிற திருச்சி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கமான ஆவின் நிறுவனத்திற்குத் தேவைப்படுகின்ற பால் உற்பத்தியின் அளவை 60 சதவீதத்திற்குத் தருகின்ற மாவட்டம் எங்களது பெரம்பலூர் மாவட்டம் என்பது அனைவருக்கும் தெரியும்.

2004 ஜூலை 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இராஜரெத்தினம், பெரம்பலூர் மாவட்டத்தை எல்லோரும் வாழ்த்துகிறோம், போற்றுகிறோம். கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை சம்பந்தமாக ஒரே ஒரு கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) கேள்வி மட்டும் கேளுங்கள்.

திரு. ப. இராஜரெத்தினம்: ஆகவே ஈரோடு மற்றும் மதுரையிலிருந்து தான் கால்நடைத் தீவனங்களைப் பெற்று வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. மேலும் கால்நடைத் தீவன மூலப்பொருட்களான மக்காச்சோளம், தவிடு, பிண்ணாக்கு போன்ற மூலப்பொருட்கள் பெரம்பலூர் பகுதியிலே அதிகமாக உற்பத்தியாகி வருகின்றன. மேலும் பெரம்பலூர் பகுதியிலே திருச்சி—சென்னை தேசிய நெடுஞ்சாலையில் இத்தகைய தொழிற்சாலை அமைப்பதற்குப் போதிய இடவசதியும் உள்ளது. ஆகவே, இங்கு கால்நடைத் தீவனத் தொழிற்சாலை அமைத்தால் பெரம்பலூர் பகுதி மாத்திரம் அல்ல, திருச்சி, தஞ்சாவூர் போன்ற பகுதிகளும் நல்ல பலன் அடைய வாய்ப்பு உள்ளதால் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து பெரம்பலூர் பகுதியிலே புதியதாக கால்நடைத் தீவனம் தயாரிக்கின்ற தொழிற்சாலை அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்தில் கால்நடைத் தீவனம் தயாரிக்க இடுபொருட்கள் கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக அம்மாவட்டத்தில் வசதிகள் இல்லை. கால்நடைத் தீவனம் தயாரிக்கத் தேவைப்படும் இடுபொருட்களான பருத்திக்கொட்டை, கடலைப் பிண்ணாக்கு, சோளம், கம்பு, கோதுமைத் தவிடு, அரிசித் தவிடு, தாது உப்புகள், வெல்லப்பாகு போன்றவற்றை வாங்க வேண்டும். மேலும், கால்நடைத் தீவனம் தயாரிக்கும் ஆலை நிறுவிட அரசுக்குக் கூடுதலாக நிதி தேவைப்படும். எனவேதான் பெரம்பலூர் மாவட்டத்தில் கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்றேன்.

கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் மையத்தினால் ஆம்பூர், ஈரோடு, மாதவரம் போன்ற இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் தனியார் நிறுவனங்களால் கால்நடைத் தீவனம் தயாரிக்கப்படுகிறது. இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் மாவட்ட கால்நடைப் பண்ணைகள் மற்றும்

[2004 ஜூலை 26

ஆட்டுப் பண்ணைகளுக்குத் தேவைப்படும் கால்நடைத் தீவனங்கள், சென்னை நந்தனத்திலுள்ள கோழியின ஆராய்ச்சி நிலையம், ஆவின் மற்றும் தமிழ்நாடு மாவட்ட பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்களிலிருந்துதான் வாங்கப்படுகின்றன. இத்துறையின்கீழ் கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏதும் செயல்படவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கிணங்க அப்பகுதியில் தீவனத் தொழிற்சாலை அமைப்பது குறித்து, நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்றுப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 16, திரு. ந. கணபதி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.*

16—

கால்நடை மருத்துவமனை

***37520—திரு. ந. கணபதி:**

மாண்புமிகு கால்நடை பராமாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, நாணக்கால்மேடு பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, நாணக்கால்மேடு பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் செயற்குறிப்பில் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

திரு. ந. கணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், எனது வானூர் தொகுதிக்குட்பட்ட கிளாப்பாக்கம் ஊராட்சியிலுள்ள நாணக்கால்மேடு*